**<u>CC.NO. 88/2016    DW-1</u>**

நாள் : 26.03.2025

பெயர் : பாஸ்கரன்

த/பெ : கிருஷ்ணன்

**<u>புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

பிழைதிருத்தல் பத்திரம் எதற்காக எதன் அடிப்படையில் பதிவானது என்பதற்கான ஆவணத்தை வழக்கில் செய்துள்ளீரா என்றால் ஆமாம். தற்போது காட்டப்படும் வரைபடம் சர்வே 126 தெங்கால் கிராமத்திற்கான வரைபடம் என்றால் ஆமாம். இந்த வரைபடத்தில் 127 தொடங்கப்படும் Dotted lines சர்வே எண்.126/3, 126/2சி, 126/1 ஆகிய சர்வே எண்களுக்கு சென்று 131 ல் முடிகிறது என்றால் ஆமாம். ஆனால் இந்த வரைபடம் 1989 தயாரித்தது ஆகும். நத்தம் ஆக 1993ஆம் ஆண்டு மாற்றப்பட்டுள்ளது. தற்போது காட்டப்படும் உட்பிரிவுகள் சர்வே எண்கள் தவறாக காட்டப்பட்டுள்ளது. தற்போது இந்த வரைபடம் **ம.சா.ஆ.9** ஆக எதிரி மூலம் குறியீடு செய்யப்படுகிறது. புகாரில் 126/2சி தெருவாக உள்ளது என்று அதை நீங்கள் ஆக்கிரமித்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். 126/2சி தற்போது என்ன நிலையில் உள்ளது என்பது காட்டுவதற்கு நீங்கள் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். ம.சா.ஆ.9 வரைபடமும் எ.ம.சா.ஆ.6 வரைபடமும் ஒன்று தான் என்று சொன்னால் ஆமாம். ம.சா.ஆ.9 விவசாய நிலமாக இருந்த சமயத்தில் எடுக்கப்பட்டது. எ.ம.சா.ஆ.6 நாங்கள் கிரயம் செய்த சமயம் எடுக்கப்பட்டதாகும். ம.சா.ஆ.9 ஆவணம் அடிப்படையிலான நிலப்பரப்பு எவ்வாறு எ.ம.சா.ஆ.6 கண்டுள்ளவாறு மாற்றம் செய்யப்பட்டது என்ற விவரம் உங்களுக்கு தெரியாது என்றால் என் அப்பாவுக்கு தெரியும். நத்தம் நிலவரத் திட்டத்தின் போது மாற்றம் ஆகியிருக்கும். சர்வே எண். 126 மொத்த இடத்திற்கும் உங்கள்

தந்தையார் உரிமையாளர் கிடையாது என்றால் ஆமாம். சர்வே எண்.126 நில உரிமையாளர்கள் எத்தனை பேர் இருப்பார்கள் என்றால் 40–50 பேர் இருப்பார்கள். சர்வே எண் 126ல் உரிமையாளர்கள் பூர்விகமாக அவர்களே அனுபவித்து வருகிறார்களா இல்லை விற்றுவிட்டார்களா என்றால் முத்துவை தவிர மற்ற அனைவரும் பூர்விகமாக அனுபவித்துவருகிறார்கள். முத்து விற்ற நபர்கள் பற்றி உங்களுக்கு தெரியாது என்றால் 126/2எ வில் ஒரு சென்ட் மட்டும் நான் வாங்கினேன், வேண்டாமாள் என்பவர்க்கு 4 சென்ட் விற்றார். மற்ற கிரயம் பெற்றவர்கள் பற்றி எனக்கு தெரியாது. எ.ம.சா.ஆ.2 க்கு முந்தைய ஆவணம் உங்கள் தகப்பனார் பெயரில் இல்லை என்றால் ஆமாம். எ.ம.சா.ஆ.2 முந்தைய ஆவணத்தை பார்த்தால் தான் உண்மைநிலவரம் தெரிய வரும் என்றால் என் தாத்தாவின் பெயரில் உள்ளது அதை நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை. அந்த ஆவணத்தில் 126/2சி உட்பிரிவு காணப்படுகிறதா என்றால் இல்லை 126/2 என்று தான் உள்ளது.

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

NAVEEN DURAIBABU
Digitally signed by NAVEEN DURAIBABU

District Munsif cum Judicial Magistrate,

Ranipet.